ஸ்ரீ:
விகாரி ஷு ஐப்பசி மீ
அக்டோபர் - நவம்பர் 2019
மலர்: 2
இதழ்: 7

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஸிகாய நம:


# தேஸிக ஸந்தேஸம்





MONTHLY NEWSLETTER FROM:
**SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM**
MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799,
Email : svdd.mylai@gmail.com, web: www.svdd.com





நவராத்ரி உத்ஸவம் - மஹாநவமி ஆஸ்தானம்

ஸ்ரீ:
விகாரி ௵ ஐப்பசி ௴
அக்டோபர் - நவம்பர் 2019

மலர்: 2
இதழ்: 7

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

### காலை

| ஞாயிறு முதல் புதன் வரை | | | வியாழன் முதல் சனி வரை | | |
|---|---|---|---|---|---|
| 6.30 | - | விச்வரூபம் | 6.00 | - | விச்வரூபம் |
| 8.30 | - | திருவாராதனம் | 7.30 | - | பொது தரிசனம் |
| 9.45 | - | சாற்றுமுறை | | | |

12.00 - உச்சிகாலம்

### மாலை

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

**தர்மகர்த்தாக்கள்:**
1. ஸ்ரீ R. முகுந்தன் 2. ஸ்ரீ P. சேஷாத்ரி 3. ஸ்ரீ N. கஸ்தூரி ரங்கன்

**Editorial Board :**
ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

Photo Courtesy: Sri K. Akash, Sri R. Anirudh & Sri P.S. Anand
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai - 87, Cell : 95000 45604
Designed: ye**SK**ay,



**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 24953799
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com



ஸ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்3ரி ஸமம் ஸ்தா2நம் ப்3ரஹ்மாண்டே3 நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே3வோ ந பூ4தோ ந ப4விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்!

பாட்டுக்கு உரிய பழையவர் மூவரைப் பண்டொருநாள்
மாட்டுக்கு அருள்தரும் மாயன் மலிந்து வருத்துதலால்
நாட்டுக்கு இருள்செக நான்மறையந்தி நடைவிளங்க
வீட்டுக்கு இடைகழிக்கே வெளிகாட்டும் அம் மெய்விளக்கே.

பாமரர் முதல் சிறார்கள் வரை ஆர்வத்துடன் எதிர்பார்க்கும் மாதம் ஐப்பசி என்பதற்குக் காரணம், தீபாவளி நிகழும் மாதம் எனச் சொல்வர்; அதாவது தீப வரிசையைக் கொண்டு, நம் இருளகற்றும் திங்கள் என்பர். ஸ்வாமி தேசிகன் திருவுள்ளத்தைப் பார்த்தால், ஸூக்ஷ்ம காரணம் புரிகிறது. இருள் நீங்குவது ஸரி; அதற்குக் காரணம் நெய்-அகல் கொண்டு நாம் ஏற்றும் தீபங்கள் அல்ல; ஆழ்வார்களில் முதன்மையானவர்களும், பழையவர்களுமான முதல் ஆழ்வார்கள் ஏற்றி வைத்த மெய்ஞானவிளக்கே. இதனைக் கொண்டு அவர்கள் ஞான வடிவான எம்பெருமானைத் தாங்களும் கண்டு, நமக்கும் காட்டினார்கள். அம் மூவரும் அவதரித்தருளிய மாதம் அல்லவா! அதிலும், மயிலைவாழ் மாதர்களுக்கும் மாந்தர்களுக்கும் இன்னுமொரு விசேஷம் – இத்தலம் பேயரை அவதரிப்பித்து பெருமை கொண்டதாயிற்றே!!

இம்மாத ஸஞ்சிகையில் நாம் அநுபவிக்கவிருப்பது:

❖ புரட்டாசி மாதத்திய கீழ்க்கண்ட மஹோத்ஸவங்களின் புகைப்படங்கள்:

✓ தேசிகன் வார்ஷிகோத்ஸவம்

✓ நவராத்ரி உத்ஸவம்

இவைகளுடன் பொருத்தமான விசேஷ வ்யாஸங்கள்.

வழக்கமான புரட்டாசி மாத உத்ஸவப் பட்டியல், பஞ்சாங்கம். சிறுவர் பகுதி இவைகளும் இடம் பெறுகின்றன.

சென்ற இதழிலிருந்து தொடங்கப்பெற்ற ஆங்கிலக் கட்டுரைப் பகுதி, இதிலும் தொடர்கிறது. வாசகர்களின் கருத்துக்களை ஆவலுடன் நோக்குகிறோம்,

கண்டு வாசித்து இன்புறுமின்.

# விகாரி வருட ஐப்பசி மாத பஞ்சாங்கம்

| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| அக்டோபர்/ நவம்பர் | ஐப்பசி | | | | | |
| 18.10.19 | 1 | சதுர்த்தி 00.17 / பஞ்சமி | வெள்ளி | ரோஹிணி | மாதப்பிறப்பு, பவித்ரோத்ஸவம் 6ஆம் நாள்: காலை ஹோமம். மாலை பெருமாள், தேசிகன் வீதி புறப்பாடு, இரவு – ஹோமம் | காலை உபயம் ஸ்ரீ S. சத்யநாராயணன் – ஸ்ரீ N.கேசவன். மாலை உபயம் ஸ்ரீமதி கமலா சுமைதாங்கி கிருஷ்ண ஸ்வாமி ஐயங்கார் குடும்பத்தினர்.. |
| 19.10.19 | 2 | ஷஷ்டி – 60.00 | சனி | ம்ருகசீர்ஷம் | பவித்ரோத்ஸவம் 7ஆம் நாள்: காலை ஹோமம். மாலை பெருமாள், தேசிகன் வீதி புறப்பாடு, இரவு – பூர்ணாஹுதி. | காலை உபயம் 1. OFFICIAL TRUSTEE OF TAMILNADU CKD MUDALIYAR & SESHACHARULU TRUST – கீழச்சேரி ஸ்ரீ S. இராகவன். மாலை உபயம் 1. OFFICIAL TRUSTEE OF TAMILNADU CKD MUDALIYAR & SES-HACHARULU TRUST, 2. ஸ்ரீ வசந்த் ஷான்பாக். பூர்ணாஹுதி, திருமஞ் சனம்: ஸ்ரீநிவாஸன் K. ஸ்வாமி |
| 20.10.19 | 3 | ஸப்தமி | ஞாயிறு | திருவாதிரை | பாஷ்யகாரர் | |
| 21.10.19 | 4 | அஷ்டமி | திங்கள் | புநர்வஸு | ஸ்ரீ ராமர் ஆஸ்தானம். | |
| 22.10.19 | 5 | நவமி | செவ்வாய் | புஷ்யம் | திருமால்வடை | |
| 23.10.19 | 6 | தசமி | புதன் | ஆயில்யம் | திருமால்வடை | |
| 24.10.19 | 7 | ஏகாதசி | வியாழன் | மகம் | காலை – பெருமாள் உத்ஸவர் திருமஞ்சனம். மாலை – பெருமாள் வீதி புறப்பாடு | ஏகாதசி உபயம்: ஸ்ரீ D. ஸ்ரீதரன் |
| 25.10.19 | 8 | த்வாதசி / திரயோதசி | வெள்ளி | பூரம் | காலை தாயார் உத்ஸவர் திருமஞ்சனம். மாலை தாயார் உள் புறப்பாடு | ஸ்ரீ ரங்கராஜன் |
| 26.10.19 | 9 | சதுர்தசி | சனி | உத்தரம் / ஹஸ்தம் – 56.08 | காலை தாயார் உத்ஸவர் திருமஞ்சனம். மாலை தாயார் உள் புறப்பாடு, எண்ணைக்குடம் வீதிபுறப்பாடு | ஸ்ரீ S.V.S. ராகவன் |
| 27.10.19 | 10 | சதுர்தசி/ அமாவாசை | ஞாயிறு | சித்திரை | தீபாவளி பண்டிகை – காலை – பெருமாள் உத்ஸவர் திருமஞ்சனம் – மாலை பொழுதுடன் ஆராதனம் – பெருமாள் வீதி புறப்பாடு | ஸ்ரீ R. வாசுதேவன் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 28.10.19 | 11 | கோவில் அமாவாசை | திங்கள் | ஸ்வாதி | காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ்சனம். மாலை வீதிபுறப்பாடு | ஸ்ரீ T.E. தேசிகாசார்யர் குடும்பத்தினர் |
| 29.10.19 | 12 | பிரதமை | செவ்வாய் | விசாகம் | அன்னகூட உத்ஸவம் – காலை – பெருமாள் உத்ஸவர் திருமஞ்சனம் – ஆஸ்தானம். பேயாழ்வார் உத்ஸவம் முதல் நாள்: காலை புறப்பாடு, திருமஞ்சனம். மாலை ஆஸ்தானம் | ஸ்ரீ S. கோபால க்ருஷ்ணன் |
| 30.10.19 | 13 | த்விதீயை 1.44 (6.40 AM)/ திருதீயை | புதன் | அநுஷம் | பேயாழ்வார் உத்ஸவம் 2ஆம் நாள்: காலை புறப்பாடு, திருமஞ்சனம். மாலை ஆஸ்தானம் | |
| 31.10.19 | 14 | சதுர்த்தி | வியாழன் | கேட்டை | பேயாழ்வார் உத்ஸவம் 3ஆம் நாள்: காலை புறப்பாடு, திருமஞ்சனம். மாலை ஆஸ்தானம் | |
| 01.11.19 | 15 | பஞ்சமி | வெள்ளி | மூலம் | பேயாழ்வார் உத்ஸவம் 4ஆம் நாள்: காலை புறப்பாடு, தாயார் உத்ஸவர் பேயாழ்வார் திருமஞ்சனம். மாலை தாயார் உள்புறப்பாடு. இரவு ஆஸ்தானம் | அழிசூர் ஸ்ரீ A. வீரராகவன்– A.V. ராமன் |
| 02.11.19 | 16 | ஷஷ்டி | சனி | பூராடம் | பேயாழ்வார் உத்ஸவம் 5ஆம் நாள்: காலை புறப்பாடு, சேனைநாதன் திருநக்ஷத்திரம். காலை பெருமாள், சேனைநாதன், பேயாழ்வார் திருமஞ்சனம். மாலை பெருமாள், சேனைநாதன் வீதி. இரவு ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீமதி ஷோபனா ராமரத்தினம் |
| 03.11.19 | 17 | ஸப்தமி 60.00 | ஞாயிறு | உத்தராடம் | பேயாழ்வார் உத்ஸவம் 6ஆம் நாள்: காலை புறப்பாடு, தேசிகன் 27 ஆம் நாள் விடையாற்றி உத்ஸவம். பேயாழ்வார், தேசிகன் திருமஞ்சனம். மாலை. தேசிகன் புஷ்பல்லக்கு, வீதிபுறப்பாடு. இரவு பேயாழ்வார் ஆஸ்தானம். | காலை தேசிகன் உபயம் ஸ்ரீ S.K. ஸ்ரீநிவாஸன். புஷ்பல்லக்கு உபயம் ஸ்ரீ. உ.வே. ராகவன் பண்டு. ஸ்ரீ மது தேசிகன் குடும்பத்தினர் |
| 04.11.19 | 18 | அஷ்டமி | திங்கள் | ச்ரவணம் | பொய்கை ஆழ்வார் திருநக்ஷத்ரம். காலை – பேயாழ்வார் உத்ஸவம் 7ஆம் நாள் வீதிபுறப்பாடு – பெருமாள், பொய்கை ஆழ்வார், பேயாழ்வார், தேசிகன் திருமஞ்சனம். மாலை – பெருமாள், பொய்கை ஆழ்வார், தேசிகன் வீதி புறப்பாடு – இரவு – ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ T.R. தேவநாதாசார்யர் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 05.11.19 | 19 | அஷ்டமி 04 02(7037) நவமி | செவ்வாய் | ச்ரவணம் 01.20 (6.33AM) / அவிட்டம் | பூதத்தாழ்வார் திருநக்ஷத்ரம். பேயாழ்வார் உத்ஸவம் 8ஆம் நாள் காலை பேயாழ்வார் புறப்பாடு.பெருமாள், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமஞ்சனம். மாலை பெருமாள், பூதத்தாழ்வார் வீதிபுறப்பாடு, இரவு ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ S.T. நரஸிம்ஹாசார்யர் குடும்பத்தினர் |
| 06.11.19 | 20 | நவமி 8.26 (9.22AM) / தசமி | புதன் | அவிட்டம் 7.95 (8.48AM / சதயம் | பேயாழ்வார் உத்ஸவம் 9ஆம் நாள்: காலை புறப்பாடு, திருமஞ்சனம். மாலை ஆஸ்தானம் | |
| 07.11.19 | 21 | தசமி – 13.23 | வியாழன் | சதயம் | பேயாழ்வார் திருநக்ஷத்ரம். மங்களாசாஸனம். பெருமாள், தாயார், பேயாழ்வார் திருமஞ் சனம். மாலை பெருமாள், ஆழ்வார் வீதிபுறப்பாடு | ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்யம் அசோசியேஷன் (பதிவு) |
| 08.11.19 | 22 | ஏகாதசி | வெள்ளி | பூரட்டாதி | கந்தபொடி வசந்தம். காலை பேயாழ்வார் வீதி புறப்பாடு. பெருமாள், தாயார் உத்ஸவர் திருமஞ்சனம். மாலை வீதிபுறப்பாடு. பின்பு தாயாருடன் உள்புறப்பாடு. | ஏகாதசி உபயம் ஒலக்கூர் ஸ்ரீ R. ஸ்ரீநிவாஸன் – ஸ்ரீ G. பத்ரிநாராயணன். வெள்ளிகிழமை உபயம் ஸ்ரீமதி ருக்மணி அம்மாள் பண்டு – C/o. ஸ்ரீ A.G. கோதண்டபாணி |
| 09.11.19 | 23 | த்வாதசி | சனி | உத்தரட்டாதி | திருமால்வடை | |
| 10.11.19 | 24 | திரயோதசி | ஞாயிறு | ரேவதி | திருமால்வடை | |
| 11.11.19 | 25 | சதுர்தசி | திங்கள் | அச்வினி | திருமால்வடை | |
| 12.11.19 | 26 | பௌர்ணமி | செவ்வாய் | பரணி | பெருமாள் உத்ஸவர் திருமஞ் சனம். மாலை வீதிபுறப்பாடு | ஸ்ரீ பாலாஜி ராஜகோபாலன் |
| 13.11.19 | 27 | பிரதமை | புதன் | கார்த்திகை | கலியன் | |
| 14.11.19 | 28 | த்விதீயை | வியாழன் | ரோஹிணி | கண்ணன் ஆஸ்தானம் | |
| 15.11.19 | 29 | திருதீயை | வெள்ளி | ம்ருகசீர்ஷம் | தாயார் திருமஞ்சனம் – உள்புறப்பாடு | |
| 16.11.19 | 30 | சதுர்த்தி | சனி | திருவாதிரை | பாஷ்யகாரர் | |

**ஸ்ரீ தேசிக மொழி**

ஸ்ரீவைகுண்டத்தில் வியக்கவைக்கும் விபூதிகளைக்கொண்ட லக்ஷ்மீகாந்தன் உள்ளான். அவ்வெம்பெருமானை தேவதைகளின் உதவியுடன் அடைகிறான் ப்ரபன்னன். அப்பொழுது ப்ரபன்னன் தன் ஸரூபத்தை தெரிந்து தான் எம்பெருமானை விட்டுவிலகக் கூடாது என்றும் பாவங்கள் அற்ற தன்மை உள்ளிட்ட எட்டு குணங்கள் மற்றும் அவற்றினால் உண்டான பலன்களை அறிகிறான். மீண்டும் அங்கிருந்து திரும்புதல் என்ற நிலை உண்டாகாமல், எம்பெருமானை ஒத்த அனுபவங்களை அடைகிறான்.

**- பரிபூர்ணப்ரஹ்மானுபவ அதிகாரம்**

ஸ்ரீ:

# பேயாழ்வார் கண்ட வேங்கடவன்

ஸ்ரீ உ.வே. நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்



*பண்டெல்லாம் வேங்கடம் பாற்கடல் வைகுந்தம் ★
கொண்டங்குறைவார்க்குக் கோயில்போல் ★ வண்டு
வளங்கிளரும் நீள்சோலை வண்பூங்கடிகை ★
இளங்குமரந்தன் விண்ணகர்.* **மூன்றாம் திருவந்தாதி – 61**

*மாமயிலைப்பதியதனில் துலாமாதத்தில்
வருஞ்சதயத்தவதரித்துக் கோவலூரில் ★
தூமுனிவர் இருவருடன் துலங்கநின்று
துன்னியபேரிருள் நீங்கச்சோதிதோன்ற ★
சேமமுடன் நெடுமாலைக் காணப்புக்குத்
திருக்கண்டேனென உரைத்த தேவே ★ உன்தன்
பாமருவு தமிழ்மாலை நூறு பாட்டும்
பழவடியேனுக்கருள்செய் பரமநீயே.* **ப்ரபந்தஸாரம் – 4**

*துலாசதபிஷக்ஜாதம் மயூரபுரகைரவாத் ★
மஹாந்தம் மஹதாக்யாதம் வந்தே ஸ்ரீ நந்தகாம்சகம் ★*

ச்ரிய: பதியான ஸ்ரீமந் நாராயணனுடைய பஞ்சாயுதங்களில் ஒன்றான ஸ்ரீநந்தகத்தின் (கத்தி) அம்சமாக ஒரு சித்தார்த்தி வருடம் ஐப்பசி மாதம் சதய நக்ஷத்திரத்தில் மாமயிலையில் உள்ள ஒரு கிணற்றில் மலர்ந்த செவ்வல்லிப்பூவில் அயோநிஜராய் ஒருவர் அவதரித்தார். எம்பெருமான் திருவடித்தாமரைகளின் மீது கொண்ட பெருங்காதலால் உண்டான சிறந்த மயக்கத்தால் பேய்போல் திரிந்தமையால், அவர் பேயாழ்வார் (மஹதாஹ்வயர்) என்றழைக்கப்பட்டார்.

மேலும், திருக்கோவலூரில் ம்ருகண்டு முனிவரின் இடைகழியில் ஏற்பட்ட நெருக்கத்தில் எம்பெருமான் யார் என்றறிய, பொய்கையார் மற்றும் பூதத்தார் ஆகிய இருவர் ஏற்றிய இரண்டு விளக்குகளில், ''நித்யைவைஷா ஜகன்மாதா விஷ்ணோ ஸ்ரீ: அநபாயிநீ, யதா ஸர்வமதோ விஷ்ணு ததைவேதம்'' என்றறிவித்த ஸ்ரீவிஷ்ணுபுராண வாக்யத்திற்கேற்ப, திருவுடன் சேர்ந்த ஸர்வேச்வரனே பரதத்வ, ஹித புருஷார்த்தமாகிறான் என்கிற ஸூக்ஷ்மார்த்தத்தைத் தமது ப்ரபந்தமான மூன்றாம் திருவந்தாதியில், ''திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்'' என்று தமிழில் முதன்முதலில் பிராட்டியில் தொடங்கி பிறகு எம்பெருமானை மங்களாசாஸனம் செய்து, இறுதியிலும் ''தேனமரும் பூமேல் திரு'' என்று முடித்து, அதாவது, ஸ்ரீவிசிஷ்டனே தெய்வமென்று தெளிவித்துப் பூர்ணோபதேசம் செய்தபடியால் ''தமிழ்த்தலைவன்'' என்னும் பெயரால் அழைக்கப்படும் பெருமையைப் பெற்றவர் பேயாழ்வார்.

இவர் மங்களாசாஸனம் செய்தருளிய திவ்யதேசங்கள் பதினைந்து. இவற்றில், வானவர்கள் சந்திசெய்ய நின்ற திருமலையின் அழகையும், அங்கு கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் திருவேங்கடவனையும் தமது மூன்றாம் திருவந்தாதியில் பத்தொன்பது பாசுரங்களினால் மங்களாசாஸனம் செய்தருளியுள்ளார். அப்பாசுர எண்களாவன: 14, 26, 30, 32, 39, 40, 45, 58, 61, 62, 63, 68, 69, 70, 71, 72, 73, 75 மற்றும் 89.

இப்படி பத்தொன்பது பாசுரங்களினால் திருமலையையும், திருவேங்கடவனையும் ஆழ்வார் தாம் அநுபவித்து மங்களாசாஸனம் செய்தருளினபடியை சில பாசுரங்களின் மூலமாக நாம் அநுபவிப்போம்.

*மாற்பால் மனம்சுழிப்ப மங்கையர்தோள் கைவிட்டு★
நூற்பால் மனம்வைக்க நொய்விதாம் ★ நாற்பால
வேதத்தான் வேங்கடத்தான் விண்ணோர் முடிதோயும் ★
பாதத்தான் பாதம் பணிந்து.* [14]

ஸ்த்ரீகளின் விஷயங்களிலுள்ள தோஷங்களை ஆராய்ந்து அவற்றில் வைராக்யத்தை வளர்த்து, திருமாலினிடத்தில் மனது நன்கு ஈடுபடும்படி சாஸ்திரத்தில் மனதைப் பதியச்செய்வது என்பது, நான்கு வேதங்களால் அறியப்பட்டவனும், நித்யஸூரிகளின் கிரீடங்கள் தொடும் திருவடிகளை உடையவனும், திருவேங்கடத்தில் எழுந்தருளி இருக்கூடியவனான எம்பெருமானை ஆச்ரயித்தால் மட்டுமே நமக்குக் கைகூடும் என்கிறார் ஆழ்வார். அதாவது யோகம் என்பது கைகூட, அப்யாஸமும் வைராக்யமும் வேண்டும். அவைகளும் எம்பெருமானை ஆச்ரயித்தே பெறப்படும் என்கிறார்.

*இறையாய் நிலனாகி எண்திசையும் தானாய் ★*
*மறையாய் மறைப்பொருளாய் வானாய் ★ பிறைவாய்ந்த*
*வெள்ளத்தருவி விளங்கொலிநீர் வேங்கடத்தான் ★*
*உள்ளத்தின் உள்ளே உளன்.* [39]

ஸ்வாமியாக இருந்தே, இப்பூவுலகமுமாய், எண்திசைகளுமாய், வேதங்களுமாய், அவ்வேதத்தில் கூறிய ஸர்வவஸ்துக்களுமாய், அப்ராக்ருதவுலகமுமாகி, சந்த்ரமண்டலத்தை அளவளாவியிருக்கக்கூடியதும், ப்ரவஹிக்கும் அருவிகளால் நன்கு உண்டான தீர்த்தங்களை உடையதுமான திருவேங்கடமலையில் இருப்பவனே தம்முடைய ஹ்ருதயத்திலும் இருக்கின்றான் என்கிறார் ஆழ்வார்.

*உளன்கண்டாய் நன்னெஞ்சே உத்தமன் என்றும்*
*உளன் கண்டாய் ★ உள்ளுவாருள்ளத்து உளன் கண்டாய் ★*
*விண்ணொடுங்கக் கோடுயரும் வீங்கருவி வேங்கடத்தான் ★*
*மண்ணொடுங்கத் தானளந்த மண்.* [40]

உலகம் தெரியாதபடி அஸாதாரணமாய்த் தன் திருவடியால் அளந்த புருஷோத்தமனே எல்லாக் காலங்களிலும் இருக்கிறான். அவன் வானம் குறுகும்படி சிகரங்களால் உயர்ந்ததும், கிளர்ந்த நீர்வீழ்ச்சிகளை உடையதுமான திருவேங்கடமலையில் எழுந்தருளிதோடு அல்லாமல், த்யானம் பண்ணுகிறவர்களின் ஹ்ருதயத்தில் அவர்கள் தம் ஸ்வாமியாய் நித்யவாஸம் செய்கிறான் என்கிறார்.

*புரிந்து மதவேழம் மாப்பிடியோடூடி ★*
*திரிந்து சினத்தால் பொருது ★ விரிந்தசீர்*
*வெண்கோட்டு முத்துதிர்க்கும் வேங்கடமே ★ மேலொருநாள்*
*மண்கோட்டுக் கொண்டான் மலை.* [45]

எம்பெருமானைப் பெறுவதற்கு எங்கோ போக வேண்டுமென்று நினையாமல், திருவேங்கடத்தில் அந்த எம்பெருமான் எழுந்தருளியிருப்பதால் அவனை அடைவது ஸுலபமென்கிறார். அத்திருமலை, ஒரு மதம் பிடித்த ஆண் யானையானது பெண் யானையுடன் ஏற்பட்ட கலகத்தால் பிரிந்து, அந்தக் கோபத்தினால் மலையுடன் தந்தத்தால் குத்திப் போர் செய்து, விசேஷமான குணங்களையுடைய முத்துக்களை விழச்செய்த இடமாகவும், முன் ஒரு காலத்தில் கோரைப்பல்லினால் பூமியை கிடந்தெடுத்த ஆதிவராஹப்பெருமானுடைய ஸ்தலமாகவும் திருமலை விளங்குகிறது என்கிறார்.

*தெளிந்த சிலாதலத்தின் மேலிருந்த மந்தி ★*
*அளிந்த கடுவனையே நோக்கி ★ விளங்கிய*
*வெண்மதியம் தாவென்னும் வேங்கடமே ★ மேலொருநாள்*
*மண்மதியில் கொண்டுகந்தான் வாழ்வு.* [58]



முன் ஒரு காலத்தில் உலகங்களை யுக்தியாலே மாவலியினிடம் பெற்று த்ருப்தியடைந்த பிரானின் வாழுமிடமாவது, பளபளப்பான கற்பாறையின் மீது உட்கார்ந்திருக்கும் பெண் குரங்கு (மந்தி) தன்னிடம் அன்புள்ள ஆண் குரங்கைப் (கடுவன்) பார்த்து ஒளிவீசுகின்ற வெளுத்த சந்திரனை கொணர்ந்து கொடு என்று கேட்குமிடமான திருவேங்கடமலையே, ஏனெனில், பளபளப்பான வஸ்து என்றால் குரங்குக்கு அதில் ப்ரீதி உண்டாவது இயற்கை. அதாவது, ஆழ்வார் திருமலை சந்த்ர மண்டலத்திற்கு மேல் வளர்ந்திருப்பதென்றபடி.

*தாழ்சடையும் நீண்முடியும் ஒண்மழுவும் சக்கரமும் ★*
*சூழரவும் பொன்னாணும் தோன்றுமால் ★ சூழும்*
*திரண்டருவிபாயும் திருமலைமேல் எந்தைக்கு ★*
*இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து. [63]*

சுற்றும் திரள்திரளாகி அருவிகள் பாயுமிடமான திருவேங்கடத்திலுள்ள என்னப்பனான திருமாலுக்கு, தாழ்ந்த ஜடையும், நீண்ட திருவபிஷேகமும், ஒளியுள்ள பரசாயுதமும், திருவாழியும், புஜத்தில் சூழ்ந்திருக்கும் நாகாபரணமும், பொன்னாலான திருவரை நாணும் ஆகிய இருவிதத் தோற்றங்களும் ஒரே இடத்தில் பொருந்தி விளங்குகின்றன. இது என்ன ஆச்சர்யம்? அவனுடைய ஸௌலப்யம் தான் என்ன என்கிறார்.

அதாவது, திருவேங்கடமுடையான் வெகு ஸுலபனாய் எழுந்தருளியிருந்து அநுக்ரஹிப்பது மட்டுமின்றி, தேவதாந்தர பக்தர்களும் தன்னை எவ்விதமாகிலும் நினைத்தாவது அடையட்டும்; காலக்ரமத்தில் அவர்களும் உண்மையறிந்து உய்வார்கள் என்று வைத்து, அவர்களுக்கு ப்ரியமான பிற வேஷத்தையும் ஏற்று மிகவும் ஆச்ரித ஸுலபனாயிருப்பதைக் காண்க என்றருள்கிறார் ஆழ்வார்.

*வெற்பென்று வேங்கடம் பாடும் ★ வியன் துழாய்க்*
*கற்பென்று சூடும் கருங்குழல் மேல் ★ மற்பொன்ற*
*நீண்டதோள் மால்கிடந்த நீள்கடல் நீராடுவான் ★*
*பூண்ட நாளெல்லாம் புகும். [69]*

எம்பெருமானின் ஸௌந்தர்யத்தில் ஈடுபட்ட பக்தஜனம், திருவேங்கடமலையைத் திவ்யமான மலை என்று கூறி வர்ணித்துப்பாடி வரும். எம்பெருமான் உகந்த விலக்ஷணமான திருத்துழாயை நாமும் உகப்பது பாதிவ்ரத்யமென்றுக் கறுத்த கூந்தலில் சூடும். மல்லர்களைக் கொன்ற நீண்ட திருத்தோள்களை உடைய திருமால், பள்ளிகொள்ளுமிடமான பாற் கடலில் அவனோடு பள்ளிகொண்டிருந்தால், விடிந்த வாறே விரைவில் அங்கு ஸ்நாநம் செய்யலாமே என்று நெஞ்சினால் அங்கே புகுந்து கிடக்கும் என்றபடி.

அதாவது, திருமலையில் பிரானை ஸேவிப்பவர் தாம் ஸ்த்ரீயாகிப் புருஷோத்தமனை அநுபவிக்கத் தகுமாறு நடந்துகொள்வதைக் கண்டு களித்து, அவனுடைய அத்தகைய ஸௌந்தர்யத்தில் ஈடுபடுகிறார் ஆழ்வார்.

*புகுமதத்தால் வாய்பூசிக் கீழ்தாழ்ந்து ★ அருவி*
*உகுமதத்தால் கால்கழுவிக் கையால் ★ மிகுமதத்தேன்*
*விண்டமலர் கொண்டு விறல் வேங்கடவனையே ★*
*கண்டு வணங்கும் களிறு. [70]*

மேற்பாசுரத்தில் நீராடுவதைச் சொன்ன ஆழ்வார், பிறகு எம்பெருமானை ஆராதிப்பதை வர்ணிப்பாராய் கஜேந்த்ராழ்வானின் ஆராதன ஊக்கம் நினைவுறத் திருவேங்கடமலையிலுள்ள யானைகளையே ஆராதனத்தில் இழிந்தவைகளாகக் குறிப்பிடுகிறார்.

அதன்படி, திருமலையில் யானையானது, தலை யினின்று இறங்கி வாயில் புகுகின்ற மதஜலத்தாலே வாயைச் சுத்தி செய்து கொண்டும், கீழ்நோக்கி இறங்கி மலை நீர்வீழ்ச்சிபோல் வெள்ளமிடும் மதப்பெருக்கினாலே கால்களையும் சுத்தம் செய்து கொண்டும், மிகுந்த தேனையுடைய மலர்ந்த புஷ்பங்களைத் துதிக்கையிலே வைத்துக் கொண்டும், வெற்றியுள்ள திருவேங்கடமுடையானை மட்டுமே தர்சனம் செய்து அர்ச்சித்துத் தொழுகின்றன என்கிறார்.

இப்படித் திருமலையில் எழுந்தருளி அருள்பாலிக்கும் வடவேங்கடவன், நாம் பெற்ற பயனாக இங்கே தமிழ் தலைவனான பேயாழ்வார் அவதரித்த மாமயிலைப் பதியதனில் அலர்மேல்மங்கையுறை மார்பனாய், ஸ்ரீ ஸ்ரீநிவாஸனாய், மேற்படி ஆழ்வாரும், நம் தூப்புல் குலமணி ஸ்வாமி தேசிகனும் கைதொழக் கோயில் கொண்டெழுந்தருளியுள்ளான். இவ்வெம் பெருமானை, தமிழ்த்தலைவனான நம் பேயாழ்வாரின் மூன்றாம் திருவந்தாதியிலுள்ள பத்தொன்பது திருவேங்கடப்பாசுரங்களைக் கொண்டு, தினமும் மங்களாசாஸனம் செய்து, எம்பெருமானுடையவும், பிராட்டியினுடையவும், தமிழ்த்தலைவனுடையவும், நம் வேதாந்த தேசிகனுடையவும் அநுக்ரஹங்களைப் பெறுவோமாக.

**ஸ்ரீ தேசிக மொழி**

திருவரங்கனின் திருவடி தம்மை ஆச்ரயித்தவர்களுடைய தோஷங்களைப் போக்கி அவர்களைப் பரிசுத்தர்களாகச் செய்ய வல்லது. இது மட்டுமின்றி மிகவும் சுவையுடையதாய் அனைவருக்கும் அனுபவிக்கும்படி இருக்கிறது.


**- முனிவாஹன போகம்**

ஸ்ரீ:





1 நவராத்ரி உத்ஸவம் - ஆஸ்தானம் 2





3 நவராத்ரி உத்ஸவம் - ஆஸ்தானம் 4





5 நவராத்ரி உத்ஸவம் - ஆஸ்தானம் 6





↑ 7 நவராத்ரி உத்ஸவம் - ஆஸ்தானம் ↓ 8








ஸ்வாமி தேசிகன் வார்ஷிக மஹோத்ஸவம்















ஸ்வாமி தேசிகன் வார்ஷிக மஹோத்ஸவம்













ஸ்வாமி தேசிகன் வார்ஷிக மஹோத்ஸவம்











ஸ்வாமி தேசிகன் வார்ஷிக மஹோத்ஸவம்





# 2. SRI DASAVATHARA STHOTHRAM

Natteri P. Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore

Sriman Narayana, an ocean of compassion, took countless incarnations – "Avathaaraa: Asankhyeyaa:" – in the universe, of which ten are considered very important. They, as we all know, are: Mathsya, Koorma, Varaha, Nrusimha, Vamana, Parasurama, Rama, Balarama, Krishna and Kalki (futuristic).

The twin objectives of these Avatharas are establishing of Dharma and annihilation of evil forces. This was asserted by Bhagavan Himself in Gita (Parithraanaaya Sadhoonaam . . . Sambhavaami Yuge Yuge).

Swami Desika composed Sri Dasavathara Sthothram at Sri Dasavathara Sannidhi in Srirangam (near Kollidam, a tributary of river Kaveri) to offer his salutation to the ten incarnations of the Lord. Incidentally, that Dasavathara Sannidhi was built by Thirumangai Azhwar and he stayed over there for a few years, add to the signifcance of the Sthothra.

In this hymn, the author describes the Lord's great deeds as portrayed by Him in the ten manifestations. In fact, he credits the Avatharas to Lord Ranganatha of Srirangam.

In an adroitly-conceived dual connotation (pun) in the first Sloka, the poet-nonpareil uses the word 'Ranga' to mean both Srirangam, the place, as well as the Stage (Ranga in Sanskrit and Arangam in Tamil mean 'stage'). The Acharya says that the Lord and His Consort – the Hero and the Heroine – use the universe, symbolised by Srirangam, as the stage to enact the play of the Ten Avatharas and that the devotees are the audience.

In another poetic beauty to be savoured, Swami Desika employs the word 'Pithaamahi' to great effect (Sloka No. 5 on Nrusimhavathara). He likens the pillar from which Lord Nrusimha emerged, to the paternal grandmother of all the Brahma Devas, as it gave birth to their father Vishnu (in the form of Nrusimha).

Further, he compares Balarama and Krishna's playfulness/pranks to sugar and milk (Sloka 9).



While both are independently tasty, adding sugar to milk only heightens the sweetness. Likewise, the brothers' playfulness was plenty right from their young age and inseparable (a la sugar in the milk) and hence all the more enjoyable. A sweet-coated analogy, indeed!

These are only little nuggets of the poetic mastery the work is replete with. More can be unearthed by delving into the hymn.

Sri Desika quite aptly brings together the names of the ten Avatharas in the penultimate Sloka and declares that those who worship these incarnations make the world sacred.

The author seeks propitiousness to the world (Jaganmangalam) through the recitation of this Sthothra. In the Phala Sruti, he says whoever even seeks to learn the hymn will have Goddess Saraswati to ascend on his tongue; devotion will rule the mind, spotless the body will become and his fame will spread in ten directions.

***To be continued...***

ஸ்ரீ:

# ஆத்மஸமர்ப்பண யாகமும் ஆத்மரக்ஷண யாகமும்

ஸ்ரீ உ.வே. பழவேரி சக்ரவர்த்தி ரா. லக்ஷ்மீநரஸிம்ஹாசார்யர் ஸ்வாமி, பெங்களூரு

**முன்னுரை:**

ஸ்வாமி தேசிகன் பற்பல க்ரந்தங்களில் ப்ரமாணங்களை அடியொற்றி அழகிய ச்லோகங்களையும் பாசுரங்களையும் இயற்றியுள்ளார். அவற்றில் வீடு பேற்றை விரும்புபவர்கள் அநுஷ்டிக்கும் ஆத்மஸமர்ப்பணத்தை ஒரு யாகமாகவும், அவ்வாறே திவ்யதம்பதிகள் பண்ணும் ரக்ஷணத்தை மற்றொரு யாகமாகவும் அருளிச்செய்துள்ளதைச் சுருக்கமாக இக்கட்டுரையில் காணலாம். இக்கட்டுரையில் எடுத்துக்கொள்ளப்பட்ட ச்லோகங்கள் ஆழ்பொருள் பலவுடையனவாதலின் முக்கியமான விஷயங்கள் சிலவற்றை மட்டும் காண்போம்.

**ஆத்மஸமர்ப்பண யாகம்:**

தைத்திரீயோபநிஷத் ஆத்மஸமர்ப்பணத்தை ஒரு யாக விசேஷமாக ஓதியுள்ளது. அதற்குத் தக்கபடி ஜீவாத்மா என்கிற அவியை வஸூரண்யமென்கிற மந்திரத்துடன் ப்ரணவத்தைக் கூறி ஸனாதனமான அச்சுதன் என்னும் அக்னியில் ஸமர்ப்பிக்கக் கடவாயாக! என்றும் ஒரு சான்று உள்ளது. இவற்றைத் திருவுள்ளம் பற்றி ஸ்வாமி ஸ்ரீஸ்துதியில் ஸாதித்துள்ள அழகிய ச்லோகத்தின் பொருளைச் சிறிது காண்போம்.

*உத்தேச்யத்வம் ஜனனி! பஜதோருஜ்ஜிதோபாதிகந்தம்*
*ப்ரத்யக்ரூபே ஹவிஷி யுவயோ: ஏகஸஷித்வயோகாத்|*

*பத்மே! பத்யு: தவ ச நிகமை: நித்யமன்விஷ்யமாண:*
*நாவச்சேதம் பஜதி மஹிமா நர்தயன் மானஸம் ந: ||*

பெருந்தேவித்தாயே! பத்மாவே! உனக்கும் உன் கணவனுக்கும் ஆத்மாவைக் குறித்து இருக்கும் ஒரே சேஷித்வத்தின் சேர்க்கையால், ஜீவாத்மஸ்வரூபமாகிற ஹவிஸ்ஸில் (ஹோம த்ரவ்யத்தில்), காரணம் சிறிதுமில்லாதபடி, அதாவது இயற்கையாகவே - நேரடியாகவே, அந்த ஹவிஸ்ஸை ஏற்கும் தன்மையைப் பெற்றிருக்கிற உங்கள் இருவரின் மகிமை, எப்பொழுதும் ஆரணங்களால் தேடப்படுகின்ற மகிமை, எங்களின் மனதைக் கூத்தாடச்செய்துகொண்டு எல்லையை எட்டவில்லை என்பது இதன் பொருளாகும்.

யாகத்தில் தேவதையைக் குறித்து அவியானது ஸமர்ப்பிக்கப்படும். ஆக்னாவைஷ்ணவம் முதலிய சில யாகங்களில் இரு தேவதையைக் குறித்து அவியானது வழங்கப்படும். அவ்வாறே ஆத்மஸமர்ப்பண யாகத்தில் பெருந்தேவி மற்றும் தேவப்பெருமாள் இருவரும்



தேவதை ஆகின்றனர். ஏனெனில் இவ்விருவரும் ஜீவாத்மாக்களுக்கு சேஷியாகின்றனர். இவ்விருவருமே வீடு பேற்றைக் கொடுக்கின்றனர். தேவதையைக் குறித்து கொடுக்கப்படும் பொருள் ஹவிஸ் (அவி) எனப்படும். இவ்வாத்மஸமர்ப்பணயாகத்தில் ஜீவனே அவியாகின்றான். பகவான் யாகத்தில் இந்திரன் முதலியோர்க்கு அவியைக் கொடுக்கச் சொல்லியுள்ளபடி நாமும் கொடுக்கின்றோம். நாராயணனின் உடலான அத்தேவர்களும் அவியை ஏற்கின்றனர். அவர்களுக்கு ஆன்மாவாயிருக்கும் நாராயணன் இதனால் ஆராதிக்கப்படுகின்றான். ஆனால் ஆத்மஸமர்ப்பணயாகத்தில் திவ்யதம்பதிகள் அவியை தேவதைகளை இடையிடாமல் நேராகவே ஏற்று அநுக்ரஹிக்கின்றனர் என்பது இந்த யாகத்தில் விசேஷமாகும். இப்படிப்பட்ட உங்களுடைய பெருமையானது நான்மறைகள் தேடி என்றும் காணமாட்டாதபடியுள்ளது. இத்தன்மை எங்கள் மனதில் ஆனந்தக்கூத்தை ஏற்படுத்தியுள்ளது. நித்யம் அன்விஷ்யமாண: (இடைவிடாமல் தேடிக்கொண்டிருக்கிற) என்ற நிகழ்காலப்ரயோகம் சுவைமிக்கது. இதனால் உங்கள் மகிமையைத் தேடும்

விஷயத்தில் நிகழ்காலம் என்றும் இறந்தகாலமாகாமல் நிரந்தரமாயுள்ளது என்ற சுவை அறியத்தக்கது. மற்றும் வேதம் முதலிய சொற்களை இந்த ச்லோகத்தில் பயன்படுத்தாமல் நிகமம் என்ற சொல்லை ஸ்வாமி பயன்படுத்தியதும் மிகவும் ரஸிக்கத்தக்கது. முடிவைக் (ஸித்தாந்தத்தைக்) கூறும் வேதமும் முடிவின்றித் தேடிக்கொண்டிருக்கின்றது என்பது தொனிக்கும் பொருளாகும்.

**ஆத்மரக்ஷண யாகம்:**

இனி ஜீவாத்மாக்களை திவ்யதம்பதிகள் காப்பதையும் ஒரு யாகமாக ஸ்வாமி ஸ்ரீபரமார்த்தஸ்துதியில் காட்டியுள்ளார். அதன் சுவையையும் சிறிது அறிவோம்.

*கமலா நிரபாயதர்மபத்நீ கருணாத்யா:*
*ஸ்வயம் ருத்விஜோ குணாஸ்தே|*
*அவனம் ஸரயதாம் அஹீநமாத்யம்*
*ச தர்ம: த்வதனன்யஸேவநீய:* ||

திருப்புட்குழி எம்போரேறே! காலில் விழுந்தவரைக் கைவிடாமல் காத்தல் என்ற யாகத்தில் தீக்ஷிதனான, தாமரையாளான மரகதவல்லி என்றும் விட்டுப்பிரியாத தர்மபத்நீயாக உமக்கு இருக்கின்றாள். உம்மிடமுள்ள கருணை முதலிய நற்பண்புகள் தானாகவே யாகத்துக்கு உதவும் ருத்விஜுக்களாக இருக்கின்றன. தேவரீரின் தன்னை அடைந்தவர்களைக் காக்கும் சீரிய அஹீனம் என்கிற வேள்வியானது உம்மைத் தவிர்ந்த மற்ற யாராலும் அநுஷ்டிக்கப்பட முடியாததாகும் என்பது இதன் பொருளாகும்.

இங்கு மரகதவல்லித் தாயாரை விட்டுப்பிரியாத தர்மபத்நீ எனக் கூறியுள்ளார். யாகத்துக்கு உடனிருந்து உதவுபவளே தர்மபத்நீ ஆவாள் என்பதை பத்யுர்நோ யக்ஞஸம்யோகே என்ற இலக்கணஸூத்ரத்தால் அறியலாம். ஆனால் விட்டுப்பிரியும் தர்மபத்னிகள் மனிதரில் மட்டுமல்ல; தேவர்களிலும் உண்டு என்பதை



ஸூசிப்பித்தார். சிவனிடம் கோபித்துக்கொண்டு தக்கன் வேள்விக்குப் பார்வதி சென்றாள். பின் அவள் பட்ட கட்டம் எல்லோரும் அறிவோம். அவள் கணவனும் தக்கன் வேள்வி தகர்த்த தலைவன் ஆனான். காஞ்சியில் அயன் வேள்வி இயற்ற முயன்றபோது அதில் பங்குகொள்ளாதது மட்டுமின்றி ஸரஸ்வதி அலையெறியும் ஆறாய்ப் பெருக்கெடுத்ததை ஸ்வாமியே ஸ்ரீஅத்திகிரிமான்மியத்தில் அன்ன வடிவாள் என்று தொடங்கும் அழகிய பாசுரத்தில் கூறியுள்ளதால் அறியலாம். ஆனால் அகலகில்லேன் இறையும் என்னும் மரகதவல்லித்தாயார் என்றும் ஜீவாத்மாக்களைக் காக்கும் மற்ற யாராலும் அநுஷ்டிக்க இயலாத யாகத்தில் எப்பொழுதும் பங்குகொள்பவள் என்பதை ரஸமாக நிரபாய தர்மபத்நீ என்று ஸ்வாமி அருளிச்செய்துள்ளதால் உணரலாம்.

ஆகையால் ஸ்வாமி தேசிகன் ஸாதித்துள்ளபடி ஆத்மஸமர்ப் பணயாகத்தை நாம் அநுஷ்டித்து, ஆத்மரக்ஷண யாகத்தை திவ்யதம்பதிகளை அநுஷ்டிக்க வைப்போம்.


## ஆஸ்திகர்களுக்கு ஓர் அறிவிப்பு

பித்ரு காரியங்கள் செய்வதற்கு, சென்னை மயிலை ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான (G.K. மண்டபம் அருகில்) அறைகள் வாடகைக்கு விடப்படும்.

விவரங்களுக்கு தேவஸ்தான அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்,**
4/11, கேசவ பெருமாள் கோயில் சன்னதி தெரு,
மயிலாப்பூர், சென்னை 600 004. தொலைபேசி: 044-2495 3799.

ஸ்ரீ:

# ஆதி-அந்தம்

ஸ்ரீ உ.வே. காவனூர் ஸுதர்சநாசார்யர் ஸ்வாமி, மேற்கு மாம்பலம்

இத்தலைப்பின் ஸாமான்ய அர்த்தம் ஆரம்பம் – முடிவு என்று கொள்ளலாம். அப்படி நாம் பொருள் கொள்ளும் போது, ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அடங்கியது என்ற மறைமுகமான (அ)ஞானமும் கிட்ட வாய்ப்புகள் அதிகம்.

எவையெல்லாம் இக்கணக்கில் அடங்கும்? எது இந்த ஆதி - அந்தம் கணக்கிற்கு அப்பாற்பட்டது? சில விஷயங்களைப் பார்ப்போம்,

வேதம் நித்யம், ஸத்யம், ஸ்வத: ப்ரமாணம் என்பது அதிஸ்பஷ்டம். அவ்வேதமே, ''சதமானம் பவதி சதாயு : புருஷ: சதேந்த்ரிய ஆயுஷ்யேவேந்த்ரியே ப்ரதி திஷ்டதி'' என்று ஒரு கணக்கைக் கூறுகிறது. பெரிய பெருமாளாம் அரங்கமாநகர் உளானை அன்றி மற்றொரு தெய்வமறியாத ஸ்ரீதொண்டரடிப்பொடி ஆழ்வார் தாம் தொடுத்த பாசுரமாலையாம் திருமாலையில், இக்கணக்கை விஸ்தாரப்படுத்திப் பின்வருமாறு கணக்கிடுகிறார்

*வேத நூல் பிராயம் நூறு மனிசர் தாம் புகுவரேலும் ★*
*பாதியும் உறங்கிப் போகும் நின்றதில் பதினையாண்டு ★*
*பேதை பாலகனதாகும் பிணி பசி மூப்புத் துன்பம் ★*
*ஆதலால் பிறவி வேண்டேன் அரங்கமாநகருளானே.*

''அந்தமிலா ஆரணங்கள் நாலாகி நின்ற, அதன் கருத்தை ஆழ்வார்கள் ஆய்ந்து எடுத்து'' என்ற ஸ்வாமி தேசிகனின் வாக்கு ஸத்யமே என்பதை இப்பாசுரம் விளக்குகிறது

வேதம் சொல்வது போல் ஒரு நூறாண்டுகள் (வாழ்நாள்) என்ற கணக்கில் மனிதன் பிறக்கிறான். சரீர ஸம்ரக்ஷணத்திற்காக தூக்கம் இன்றியமையாததாகிறது. தூக்கத்தில் பல வருடங்கள் கழிகின்றன. நம் பாபங்களால் பெரியவர்கள், ஞானிகளான ஆசார்யர்கள் ஸம்பந்தம் கிடைக்காமல் பேதையாத் திரியும் காலமோ அதிகம். பாலக வயதில் ஸத்விஷயங்களில் உழைக்காமல் பல தீமைகள் செய்து காலம் கழிகிறது. உறுபிணி நோய்கள் உடலில் ஏறி நம்மை வாட்டுகையிலும் காலக்கழிவு. தேஹ யாத்ரையில் நேரம் வீணாகிறது. உறவுகள் பிரிகையில் துக்கங்கள் என்று போகின்ற காலங்கள்.

இப்படி பல விதங்களில் நேரம் வீணாகிறது. ஆதலால் இம்மனிசப்பிறவியை நீக்கி, தலைவனான பெரிய பெருமாள் மறுபிறவித் துயர் வாராவகை செய்யுமாறு ஆழ்வார் அடைக்கலம் புகுந்தார்.

ஆதி - அந்தம் கணக்கிற்கு உட்பட்டது என்று நமக்குத் தோன்றுகிறது அல்லவா? இதை சற்றே நம் பெரியவர்கள் காட்டிய தொல்வழியில் ஆராய்வோம்



ஆழ்வார் வேதமார்கமாகப் போட்ட கணக்கு சரீரத்துக்கே ஆகும். ஜீவனுக்கல்ல. பிறவி வேண்டேன் என்று பாடியதை ஆழ்ந்து நோக்குக. ''எந்த விதமான சரீரமும் இனி வேண்டாம்; இந்த ஜீவன் இனி பிறக்க வேண்டாம்; இந்த சரணாகதி மூலம் அதை உன் பொறுப்பாக்கி விடுகிறேன்'' என்று பாரத்தை இறக்கி வைக்கிறார். ''உடலம் அழித்திடும் - உள்ளுயிர் அழியாதெனைப் போல்'' என்ற கீதாசார்யனின் உபதேசம் இங்கு ஸ்மரிக்கவல்லது.

ஆகவே கர்மங்களால் சரீரங்களா, சரீரங்களால் கர்மங்களா என்ற கேள்வி எழுகையில் அநாதி என்று (பீஜாங்குர ந்யாயத்தால்) பதில்.

ஒரு விதையிலிருந்து உண்டான வ்ருக்ஷத்தில், பழங்கள் உள்ளன, அப்பழங்களில் விதைகள் இருக்கின்றன. விதையினால் மரமா? மரத்தால் விதையா? என்று அறுதியிட்டுக் கூற முடியாது. ஆதலால் அநாதி என்று முடிவு. மோக்ஷ உபாயங்களில் சிறந்ததாம், எளிதாம் சரணாகதியை அநுஷ்டிக்க இச்சுழலிற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க முடியும். அந்தம் உண்டாகும்.

அர்ச்சா ரூபியாய் ஸேவை ஸாதிக்கும் பகவானின் திவ்ய மங்கள விக்ரஹங்களுக்கு பாதாதி கேச பர்யந்தம் அல்லது கேசாதி பாத பர்யந்தம் என்று ஒரு ஆகம சாஸ்த்ர, பூர்வாசார்ய அநுபவோக்த வரையறு உண்டு. ஆனாலும் திவ்ய மங்கள விக்ரஹங்களின் விசேஷங்கள், அப்படிப்பட்ட திருமேனிகளை ஸேவிப்பதால் அவனுடைய பக்தர்களுக்கு ஏற்படும் ஆனந்தம் ஆகியன எல்லாவிதமான கணக்குகளுக்கும் அப்பாற்பட்டது.

ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் எம்பெருமானை 'சுபஸுபகதநு:' என்று போற்றுகிறார். சுப - மங்களமான திருமேனி ஸேவிப்பவர்களின் பாபங்களை ஒழித்து; ஸுபகம் - தூய அமுதைப் பருகிப் பருகி என்றபடி போக்யம் உண்டாகி மீண்டும் மீண்டும் பக்தர்களை ஸேவிக்க வைக்கும் வல்லமை உடைய; தநு: திவ்ய மங்கள விக்ரஹம்.

திருவாய்மொழி மூன்றாம் பத்தில் பரிபூர்ண திவ்ய மங்கள விக்ரஹ அநுபவம் ஏற்படுகிறது.

★முடிச்சோதியாய்★ என்று ஆரம்பிக்கும் முதல் பதிகத்தில் எம்பெருமானுடைய ஸௌந்தர்யத்தையும், அவன் திருமேனியில் இருக்கும் - வெளிப்படும் அபார தேஜஸ்ஸையும், இவனே பரஞ்சோதி என்றும் பரக்கப்பாடுகிறார்.

★முந்நீர் ஞாலம்★ பதிகத்தில் ஸ்ருஷ்டி செய்தவன் எம்பெருமானே என்று புகழ்ந்து தன் திருமேனியாலேயே - வராஹனாய் கீண்டெடுத்ததையும், வாமனனாய் மூவடியால் அளந்ததையும், பாசுரமிடுகிறார்.

★ஒழிவில் காலம்★ பதிகத்தில் - ஸ்ரீ வைகுண்ட நித்ய கைங்கர்யத்தை ப்ரபந்நர்கள் வருநாள் பழுதற்று வாழும் பொருட்டு திருவேங்கட மலையில் நின்றதைப் போற்றி உகக்கிறார் குலபதி.

★புகழும் நல் ஒருவன்★ பதிகத்தில் - பகவானுடைய திவ்ய மங்கள விக்ரஹம் ★ ஸர்வாகாரத்வம் ★ பொருந்தியது என்று ஏத்துகிறார். பஞ்ச பூதங்கள், ஸமுத்ரங்கள், ஸகல தேஜ, ரஸவத் பதார்த்தங்கள் எல்லாம் எம்பெருமானின் திருமேனியில் அடக்கம் என்றபடி.

★மொய்ம்மாம் பூம்பொழில்★ பதிகத்தில் - ஆழ்ந்து அனுபவித்து அர்ச்சையை ஸேவிப்பவர்களை ஈர்த்து, அப்படியான அடியார்களை பித்தராக்கும் தன்மை உடையதைப் போற்றுகிறார்.

★செய்ய தாமரை★ பதிகத்தில் - பகவானின் ஸௌப்ய குணம் பாடப்படுகிறது. ஸ்ரீவைகுண்டம், திருப்பாற் கடலில் எட்டவொண்ணாத இடங்களில் இருக்கும் அவனே அவதாரங்களில் பரம ஸுலபனாய் இருந்த தையும், அனைத்து குணங்களும் அர்ச்சாவதாரங் களுக்குப் பொருந்தும் என்று பாடுகிறார்.

★பயிலும் சுடரொளி★ பதிகத்தில் - அவன் திருமேனியின் அழகில் ஆழ்ந்திருக்கும் ஸ்ரீவைஷ்ணவ கள் பூஜிக்கத் தகுந்தவர்கள் என்று தாஸத்வத்தின் அவச்யத்தை உபதேசம் செய்கிறார் ஸ்ரீ நம்மாழ்வார்.

★முடியானே★ பதிகத்தில் - நம் இந்த்ரியங்கள் எம்பெருமானின் வடிவழகை அநுபவிக்கவே என்றும், அதுவே சாலச்சிறந்தது என்றும் ஏத்தியபடி.

★சொன்னால் விரோதம்★ பதிகத்தில் - தேஹயாத்ரை பொருட்டு மானிட சாதியில் தோன்றிய மானிடர்களைப் பாடும் கவிகளுக்கு பாட்டுக்குறியவன் பரம்பரனே என்று ஹிதத்தை உபதேசித்து ஸந்மார்கத்தை காட்டுகிறார் வண் சடகோபர்.

★சன்மம் பல பல★ பதிகத்தில் - எம்பெருமான் எடுத்த அவதாரங்கள் எல்லாம் லோக ரக்ஷணத்திற்கே என்றும் அவன் திருமேனியில் ஈடுபடுவோர்க்கு துயர், துன்பம், அல்லல், துக்கம், கேடு, மாசு என ஒன்றும் அண்டாது என்று விவரிக்கிறார்.

ஆதி-அந்தம், பிறப்பொடு மூப்பொன்று இல்லவனான பகவானின் திவ்ய மங்கள விக்ரஹங்களுக்கு ஒரு குறிப்பிட்ட அளவு இருந்தாலும், அவனை உணர்ந்து உணர்ந்து கைகளாலாரத் தொழுவோர்க்கு, அந்தமிலாப் பேரின்பம் அருந்துபவர்களுக்கு ஏற்படும் ஆனந்தம் அளவற்றது - கணக்கிட முடியாததும் கூட.

## ஐப்பசியில் முக்கிய உத்ஸவங்கள்

| |
|---|
| **திருப்பவித்ர உத்ஸவம்** (7 நாட்கள்) அக்டோபர் 13 (ஞாயிறு) முதல் 19 (சனி) வரை |
| **திருப்பவித்ர உத்ஸவ பூர்ணாஹுதி** அக்டோபர் 19 (சனி) |
| **தீபாவளி உத்ஸவம்** அக்டோபர் 27 (ஞாயிறு) |
| **அன்னகூட உத்ஸவம்** அக்டோபர் 29 (செவ்வாய்) |
| பேயாழ்வார் உத்ஸவம் (7 நாட்கள்) அக்டோபர் 29 (செவ்வாய்) முதல் நவம்பர் 7 (வியாழன்) வரை |
| **ஸேனைநாதன் திருநக்ஷத்ரம்** நவம்பர் 2 (சனி) |
| **ஸ்ரீ தேசிகன் விடாயாற்றி** நவம்பர் 3 (ஞாயிறு) |
| **பொய்கையாழ்வார் சாற்றுமுறை** நவம்பர் 4 (திங்கள்) |
| **பூதத்தாழ்வார் சாற்றுமுறை** நவம்பர் 5 (செவ்வாய்) |
| **பேயாழ்வார் சாற்றுமுறை** நவம்பர் 7 (வியாழன்) |
| **கைசிக ஏகாதசி** நவம்பர் 8 (வெள்ளி) |
| **கைசிக த்வாதசி** நவம்பர் (சனி) |

ஸ்ரீ:

## சிறுவர்க்காக

# பாட்டீ! ஒரு கதை சொல்லேன்...

ஸ்ரீ உ.வே. நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி, மயிலாப்பூர்

**பங்கஜம் பாட்டீ:** அடுத்த ச்லோகம் :

*''யஸ்மாதேவ மயா ஸர்வம் சாஸ்த்ரம் அக்ராஹிணாங்யத:|*
*வேங்கடநாதாய மம நாதாய மங்களம் ||''*

**இதுக்கு அர்த்தம்:** எவரிடமிருந்தே எல்லா சாஸ்த்ரங்களையும் அறிந்து கொண்டேனோ, எனக்கும் நாதனான அந்த வேங்கடநாதனுக்கு மங்களம் உண்டாகட்டும்.

**ஸுமதி:** பாட்டீ! கத்துக்கற விஷயத்தில, வரதாசார்யருக்கும்-ஸ்வாமி தேசிகனுக்கும் பொருத்தம் இருக்கு இல்ல! ரெண்டு பேருக்குமே ஆசார்யர் ஒருத்தர் கிட்டேர்ந்தே எல்லாத்தையும் கத்துக்கற வாய்ப்பு அமைஞ்சிருக்கு.

**பங்கஜம் பாட்டீ:** ஆமாம்மா.

**ஸுந்தரராஜன்:** பாட்டீ! 'எல்லார்க்கும் நாதன்' அப்படீன்னு சொல்லச்சேயே, இவர்க்கும் நாதன் அப்படீங்றது கெடைக்கறச்ச, 'மம நாதாய' அப்படீன்னு தனியா ஒரு தரம் சொன்னத்துக்கு காரணம் என்ன பாட்டீ!

**பங்கஜம் பாட்டீ:** தேசிகன், பாஷ்யகாரரோட அவதாரமோன்னோ, அவர் பேச்சே இவரும் பேசரார் – பாஷ்யகாரர் பெரிய கத்யத்தில, தாயாரப் பத்தி சொல்லச்சே, 'அகில ஜகந் மாதரம்'-ன்னு சொன்னப்பறமும், 'அஸ்மந் மாதரம்' அப்படீன்னார். பெருமாளக்கூப்பிடச்சே, 'அகில ஜகத் ஸ்வாமிந்' அப்படீங்கறத்தைத் தொடர்ந்து 'அஸ்மத் ஸ்வாமிந்' அப்படீன்னும்; ஸ்ரீரங்ககத்யத்தில 'ஸ்ரீரங்கநாத' என்னப்பறம் 'மமநாத' அப்படீன்னாரோல்யோ!

> **ஸ்ரீ தேசிக மொழி**
>
> எம்பெருமானார் திருவடிகளில் அசஞ்சலமான பக்தியுடையவர்கள், வேதாந்தமாகிற கடலில் மூழ்கி முத்துக்குளித்து பிறவாதிகளை முறியடித்து நலமந்தமில்லதோர் நாட்டைக் காட்டித் தருவார்கள்.
>
> **- யதிராஜ ஸப்ததி**

எதுக்காக?-ன்னா – பிராட்டி / எம்பெருமானோடு தனக்கும் ஒரு ஸம்பந்தம் இருக்கறத, தனக்குக் கெடச்ச பாக்யமா நெனைக்கிறாராம். இன்னும் தன்னைப் போன்ற எளியவாளுக்கும் ஸ்வாமியா இருக்காளே-ன்னு, தன்னப்பத்தித் தாழ நினைக்கிறாராம். அந்த கருத்துதான் வரதாசார்யருக்கும்.

எல்லாத்தையும் கத்துக் குடுத்தத்துக்கு நன்றியறிதலா ஆறது, மங்களாசாஸனம் பண்றது. அடுத்த ச்லோகத்த பாப்போமா ...

*''பித்ரே ப்ரஹ்மோபதேஷ்ட்ரே மே குரவே தைவதாய ச |*
*ப்ராப்யாய ப்ராபகாய அஸ்து வேங்கடேசாய மங்களம் ||''*

**இதுக்கு அர்த்தம்:** நேக்கு தந்தையாவும், காயத்ரீ மந்த்ரத்த உபதேசம் பண்ணவராயும், அடுத்து மத்த மந்த்ரங்களையும்/ வித்யைகளையும் சொல்லிக் கொடுத்த ஆசானாயும், கல்யாண குணங்கள் எல்லாத்தாலேயும் விளங்குபவராயும், சேரவேண்டிய இலக்காயும், அவ்விலக்கை சேர்ப்பிப்பவராயும் இருக்கும் வேங்கடாசார்யருக்கு மங்களம் உண்டாகுக.

இப்படி ஒரு ஆறு ஸம்பந்தத்தச் சொல்றார்.

**ஸுமதி:** 'தனக்கு எல்லாம் கத்துக்கொடுத்தத்துக்காக வாழ்த்தறார் அப்படீன்னு முன் ச்லோகத்துல சொல்லியாச்சே பாட்டீ! மறுபடியும் என்னத்துக்கு?

**ஸுந்தரராஜன்:** பாட்டீ! இது எனக்கு ஒரு விஷயத்த ஞாபகப்படுத்தறது. ஸ்ரீக்ருஷ்ண ஜயந்தீ அன்னிக்கு தாத்தா ஸ்ரீமத்பாகவதம் வாசிச்சு அர்த்தம் சொல்லச்சே சொன்னது.

**ஸுமதி:** அது என்ன அண்ணா, சொல்லேன். நான் அப்ப தூங்கியே போயிட்டேன்.

ஸுந்தரராஜன் : அன்னிக்கு ஸ்ரீமத்பாகவதத்தில 'க்ருஷ்ண ஜனனம்' வரை வாசிக்கறது பெரியவா வழக்கம். தாத்தா சொன்னா - ஸ்ரீ சுகமஹர்ஷி கிட்ட பகவத்கதைகள கேட்டுண்டு இருக்கார் பரீக்ஷித்து மஹாராஜா. ரிஷி, யதுவம்சத்து கதையெல்லாம் சுருக்கமா சொல்லிண்டு வந்தார். அதக்கேட்ட மஹாராஜா, 'அந்த யாதவ குலத்துல அவதாரம்

பண்ண க்ருஷ்ணரோட சரித்ரத்த விளக்கமா சொல்ல வேணும்-னு ப்ரார்த்திச்சார். ஸந்தோஷப் பட்ட சுகப்ரஹ்மம், 'சொல்றேன்; அதுக்கு முன்னாடி, இவ்வளவு கதையெல்லாம் சொல்லச்சே, திருப்பிக் கேக்காத நீ, க்ருஷ்ணன் சரித்ரத்தமட்டும் குறிப்பா விளக்கச் சொல்றயே, என்ன காரணம்?' அப்படீன்னார். அதுக்கு பரீக்ஷித்து மஹாராஜா நாலு காரணம் சொல்றார் –

ஒண்ணு, க்ருஷ்ணன்தானே உலகவாழ்க்கை-ங்ற வ்யாதிக்கு அம்ருதம் போன்ற மருந்து. இன்னும் மோக்ஷம் பெற்ற ஸாதுக்களும் அவர் குணங்களையே பாடிக்கொண்டு த்ருப்தியில்லாமல் நிக்கறா. அவர் பேரைச் சொல்றதே உடலுக்கும் உள்ளத்துக்கும் ஸந்தோஷத்தக் கொடுக்கறதாச்சே. யாருக்குத்தான் அவர் கதைய கேக்றத்துல ஆசை இருக்காது ?

ரெண்டு, குருக்ஷேத்ர யுத்தத்துல கௌரவாளோட பெரிய ஸேனைய எதிர்க்கச்சே என்னோட தாத்தா (அர்ஜுனன்), இந்த க்ருஷ்ணனோட திருவடியை பிடிச்சிண்டே, ஜெயுச்சுட்டார் இல்லையா!

மூணு, க்ருஷ்ணன்தானே எல்லாருக்கும் ஆத்மாவா இருந்துண்டு, வழிநடத்தறது- உஜ்ஜீவனம் பண்றது.

நாலாவது, சண்டைல த்ரோணரோட பிள்ளை அச்வத்தாமா பாண்டவ குலத்த பூண்டோட அழிக்கறதுக்காக அபாண்டவாஸ்த்ரம் விட்டார்; அது பாண்டவா அஞ்சு பேரைத் தவிர மத்த எல்லாரையும் அழிச்சுடுத்து. அப்ப நான் அம்மா கர்ப்பத்துல இருந்தேன்; என்னையும் அது விடல. நான் வெந்து கரிக்கட்டையா கர்ப்பத்திலேர்ந்து விழுந்துட்டேன். அப்பறம் ஸ்ரீக்ருஷ்ணரோட பாததூலி பட்டு ஒரு மனுஷ்யனா உயிர் பிழச்சேனே – அத எப்படி மறப்பேன்' அப்படீன்னார்.

அதுபோல வரதாசார்யரும், ஸ்வாமி தேசிகனோட சரீர-ஸம்பந்தம் கிடச்சு, அவருக்கு புத்ரனா பிறந்தத, மிகப்பெரிய பாக்யமா கருதறார்; இல்லையா பாட்டீ!

**பங்கஜம் பாட்டீ:** ரொம்ப பொருத்தம்; அதுவும் தாத்தா சொன்னதை அப்படியே க்ரஹிச்சுண்டு, இந்த ஸந்தர்ப்பத்தோட பொருத்திச் சொல்றது ரொம்ப ரொம்ப அழகு.

**ஸுந்தரராஜன்:** பாட்டீ! மொதல்-து, புரியறது; அடுத்தது, உபநயனம் பண்றச்சே காயத்ரீ மந்த்ரம் உபதேசம் பண்றாளே, அதத்தானே சொல்றார்! மத்ததெல்லாம் என்னது பாட்டீ ?

**பங்கஜம் பாட்டீ:** மூணாவதா, 'குரு' அப்படீங்கறார். இந்த வார்த்தைக்கு, 'அறியாமை-ங்ற இருளைப் போக்கறவர்'-ன்னு அர்த்தம். காயத்ரீதான் உபதேசம் பெத்துண்டுட்டாரே, அப்படீன்னா, இந்த காயத்ரீ மந்த்ரம், முதல் மூன்று வர்ணத்தவாளுக்கும் பொதுவானது; ஒவ்வொருத்தருக்கும் விதிக்கப்பட்ட கர்மாவ செய்யறத்துக்கு தகுதிய உண்டாக்கறது. ஆனா இதுக்கும் மேல, எம்பெருமானப் பத்தியும் அவனுக்கு நாம தாஸர்கள் அப்படீன்னும் தெரிஞ்சுக்கணும். இந்த சடங்குக்கு 'வைஷ்ணவீகரணம்' அப்படீன்னு சொல்லுவா. (அதாவது, ஸமாச்ரயணம்-னு பண்ணிக்கிறோமோ, அதான்). அப்போ, ஆசார்யாள் சில மந்த்ரங்கள, முக்கியமா மூலமந்த்ரம்-த்வயம்-சரம ச்லோகம் இதுகள-உபதேசிப்பா. இது ரொம்ப முக்கியம். இதத்தான், திருமங்கையாழ்வார், 'அன்று நான் பிறந்திலேன்; பிறந்தபின் மறந்திலேன்' அப்படீன்னார். அதாவது இந்த மூணு மந்த்ரங்களையும் ஆசார்யன் கிட்டேர்ந்து உபதேசம் பெத்துண்டோமானால்தான் நாம் வைஷ்ணவனாக – விஷ்ணுவைச் சேர்ந்தவனாக – ஆவோம். ஆக, இந்த ஆசார்யன்தான் மிகவும் முக்கியர், அப்படீங்கறது ஸ்வாமி தேசிகனோட வாக்கு.

**ஸுமதி:** திருமங்கையாழ்வார் சொன்னதச் சொன்னேளே; அவருக்கு யார் பாட்டீ! ஆசார்யன்?

**பங்கஜம் பாட்டீ:** (வயலாளி மணவாளன்) பெருமாள்தான். இதுனாலத்தான் ஆழ்வாருக்கு 'ஸர்வேச்வரன் பக்கலிலே ஸர்வார்த்தக்ரஹணம் பண்ணின' என பிருதம் சூட்டப்பட்டது.

நாலாவதா, 'தெய்வம்' அப்படீங்றார். இதுக்கு பொதுவா உயர்ந்த தேவதா-விசேஷம் அதாவது பெருமாள்-னு அர்த்தம். இங்கு வரதாசார்யர், ஆசார்யரான ஸ்வாமிதான் தனக்கு பெருமாள், அப்படீங்றார். இதிஹாஸ-புராணங்கள் எல்லாம் இதே கருத்தைத்தானே வலியுறுத்தறதுகள்.

ஐந்தாவது/ ஆறாவதா, அடையப்படவேண்டிய வஸ்துவாயும்/ அடைவிக்கும் வஸ்துவாயும் இருபவர் அப்படீங்கறார். இது நம்ம ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தோட முக்கிய கொள்கையச் சொல்றது. இதக் கொஞ்சம் விளக்கமா சொல்லணும்; அதனால அப்பறமா சொல்றேன், ஸரியா.

(தொடரும்)

**Sponsorships and donations towards publication expenses are welcome**

ஸ்ரீ:



*With Best Compliments From:*

**Kozhiyalam Family**

27, Venkatesa Agraharam, Mylapore, Chennai 600004.

***In Memory of Sri K. Srinivasan***

SVDD thanks **Kozhiyalam Family**
for sponsoring this month's issue of Desika Sandesam





ஸ்வாமி தேசிகன் வார்ஷிக மஹோத்ஸவம்









